அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.272/2015

தேதி. 11.11.2015

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசுடன் கைகோர்த்து - சேவை அமைப்புகள் அமைப்பிற்கு ஒரு கிராமத்தைத் தேர்வு செய்து உதவிகள் செய்யலாம்

## ச.ம.க.நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

தமிழ்நாடு முழுவதும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருந்தாலும் கடலூர் மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 28 பேர் உயிரிழந்த சம்பவம் மிகுந்த வேதனை அளிக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு நிவாரண உதவிகளையும், மருத்துவ உதவிகளையும் , பாதுகாப்பையும் வழங்கி வருகிறது. அத்துடன் தமிழகத்தில் உள்ள அனைத்து சேவை அமைப்புகளும் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்திட முன்வரவேண்டுகிறேன்.

ரோட்டரி, அரிமா போன்ற பல்வேறு அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உடை, போன்ற உதவிகளையும், அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி உதவலாம். தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து சேவை அமைப்புகளும் மழை வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான ஏதாவது ஒரு பகுதியில் ஒரு அமைப்பிற்கு ஒரு கிராமத்தை தேர்வு செய்து அங்குள்ள மக்களுக்கு உதவ முன்வரவேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன். சமத்துவ மக்கள் கட்சி நிர்வாகிகளும் தொண்டர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளைச் செய்திடும் வகையில் பணியாற்ற வேண்டுகிறேன்.

நன்றி, வணக்கம்.<br>
உழைப்பவரே உயர்ந்தவர்,<br>
என்றும் அன்புடன்,

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,

*தலைவர்.*